மக்களுக்கு! நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.00

UTHAYAN

சுடர்: 5 பிரமோதூத ஸ்ரீ கார்த்திகை மீ 07 உ வெள்ளிக்கிழமை (23 11 - 1990) ஹிஜ்ரி 1410 ந. ஆகிர் 13 கதிர் 261

# வவுனியா நகரப் பகுதியிலும் விமானத் தாக்குதல் முஸ்தீபு!

## பிரசுரம் மூலம் சூசகமாக தெரிவிப்பு

வவுனியா, நவம்பர் 23

வவுனியா நகரப் பகுதியிலும் அதன் சுற்றாடலிலும் விமானத் தாக்குதல் நடத்துவதற்கு முஸ்திபுகள் இடம்பெற்று வருகின்றன.

ஸ்ரீலங்காப் படையினர் கடந்த செவ்வாய்க்கிழமை வவுனியா நகரிலுள்ள இராணுவத் தடை முகாம்களில் வைத்து மக்களுக்கு விநியோகித்த துண்டுப் பிரசுரம் ஒன்றில் இந்த விவரம் சூசகமாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

''வவுனியா வாழ் மக்களுக்கு'' என்று தலைப்பிட்டு, ''சகோதர சகோதரிகளே;'' என்று விளித்து தூய தமிழில் இந்தத் துண்டுப் பிரசுரம் எழுதப்பட்டிருந்தது.

''ஆகாய மார்க்கமான தாக்குதல்கள் இடம்பெறும் அறிகுறி தோன்றியதும், பொது மக்கள் உடனடியாக அருகிலுள்ள தேவாலயங்களுக்குள்ளேயோ அல்லது கோவில்களுக்குள்ளேயோ சென்றுவிட வேண்டும்''—என்று அந்தப் பிரசுரத்தில் கேட்கப்பட்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பதவி விலகுவதாக தாட்சர் அறிவிப்பு

லண்டன், நவ; 23

பிரிட்டிஷ் பிரதமர் மார்க்கிரட் தாட்சர் பதவி விலகுவதாக நேற்று அறிவித்தார்.



அடுத்தவாரம் ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சித் தலைவராக புதியவர் ஒருவர் தெரிவு செய்யப்பட்ட பின்னர் தனது பதவி விலகும் கடிதத்தைச் சமர்ப்பிக்கப் போவதாக திருமதி தாட்சர் நேற்றுக் காலை (லண்டன் நேரப்படி) திடீரென்று அறிவித்தார்.

நேற்றுக்காலை 9 மணிக்கு விசேட அமைச்சரவைக் கூட்டம் ஒன்றை திருமதி தாட்சர் அழைத்து தனது பதவி விலகும்முடிவை வெளியிட்டார்.

இதனைத் தொடர்ந்து, கட்சியின் தலைமைப் பதவிக்கான இரண்டாம் கட்டத் தேர்தலில் போட்டியிடுவதற்கான நியமனப் பத்திரங்களை தாக்கல் செய்யும் முடிவை கடைசி நிமிடத்தில் திருமதி தாட்சர் மாற்றிக்கொண்டார்.

இரண்டாம் கட்டத் தேர்தலில் இப்போது புதிதாக

[4 ஆம் பக்கம் பார்க்க]

## சீ-பிளேன் சாவகச்சேரியிலும் தாக்குதல் நடத்தியது

### இளைஞர் ஒருவர் உயிரிழப்பு

தென்மராட்சி, நவ; 23

சாவகச்சேரி, சங்கத்தானைப் பகுதிகளிலும் நேற்று முன்தினம் (புதன்) இரவு சீ-பிளேன் தாக்குதல் நடத்தியது; இத்தாக்குதலின்போது ஒருவர் பலியானார்.

சங்கத்தானையைச் சேர்ந்த மரியதாஸ் தேவபாலன் (15 வயது) என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

ஆபத்தான நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரும் போது இவர் மரணமான

(4ஆம் பக்கம் பார்க்க)

## தபால் விநியோகம் நேற்று நடந்தது

யாழ்ப்பாணம், நவ. 23

ஹெலித் தாக்குதல்கள் பரவலாக மேற்கொள்ளப்பட்ட போதிலும், நேற்று யாழ். மாநகர எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தபால் விநியோகம் தடையின்றி நடந்தது.

இடம்பெயர்ந்தவர்களுக்கான கடிதங்களும் யாழ். பிரதம தபாலகத்தில் வைத்து வழங்கப்பட்டன. (ஓ-5-6)

## நேற்றும் ஹெலி தாக்குதல்; பலர் ஆஸ்பத்திரிகளில்

யாழ்ப்பாணம், நவ; 23

நேற்றும் குடாநாட்டில் பரவலாக சகல பிரதேசங்களிலும் ஹெலிகள் தாக்குதல்களை நடத்தின.

நேற்று பல இடங்களிலும் நடந்த தாக்குதல்களில் அதிகமானோர் காயமடைந்தனர் என்று எமது செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

வீடுகளில் இருந்தவர்கள், கடைகளில், சந்தைகளில் நின்றவர்கள், வீதிகளில் சென்ற

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு பகுதியிலும் சூடு

யாழ்ப்பாணம், நவ; 23

பருத்தித்துறை துறைமுகப் பகுதியில் பாதுகாப்புப் பகுதி எனக் கணிக்கப்பட்டு வந்த பிரதேசத்திலும் நேற்றுக் காலை ஹெலி தாக்குதல் நடத்தியது.

தற்போதைய சூழ்நிலையை அடுத்து கப்பலில் இருந்து பொருள்களை இறக்கும் வேலைகள் கடந்த இரு நாட்களாகத் தடைப்பட்டிருந்தன; அதன்பின் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினர் பாதுகாப்பு அமைச்சுடன் தொடர்பு கொண்டு பேசிய பின்னர் நேற்றுக் காலை முதல் பொருள்களை இறக்கும் வேலைகள் மீண்டும் ஆரம்பமாகின.

வேலைகள் ஆரம்பமாகி சில மணி நேரத்திற்குள் — நேற்றுக் காலை 9 மணியளவில் ஹெலி ஒன்று இறங்குதுறைப் பிரதேசத்தினுள் துப்பாக்கி வேட்டுகளைத் தீர்த்தது.

இதனால் பொருள்களை இறக்கும் வேலை சிறிது

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் வவுனியாவில் மாவீரர் நிகழ்ச்சிகள்

வவுனியா, நவ. 23

வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் மாவீரர் தின விழா நிகழ்ச்சிகள் விமரிசையாக நடைபெற்று வருகின்றன.

வவுனியாவில்பூந்தோட்டம் பகுதி உட்பட ஏனைய பல பகுதிகளிலும் அலங்காரவளைவுகள் அமைக்கப்பட்டுள்ளன. வீதிகள் மஞ்சள்-சிவப்புக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உடையார்கட்டு, வற்றாப்பளை, புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், மாங்குளம், துணுக்காய் போன்ற பகுதிகளிலும் மாவீரர் தினம் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

கிளிநொச்சி மாவட்டத்திலும் வீதிகள்தோறும் அலங்கார வளைவுகள் அமைக்கப்பட்டுள்ளன. (ஓ-3-5)

## ஹெலி வேட்டு மத்தியிலும் மாவீரர் வார நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், நவ; 23

மாவீரர் வாரத்தின் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் நேற்று யாழ்-குடாநாடு முழுவதும் உணர்ச்சிபூர்வமாக இடம்பெற்றன.

குடாநாட்டின் பல பகுதிகளிலும் மாவீரர் தினம் சம்பந்தமான கூட்டங்கள், மாவீரர்களின் பெயர்களை வீதிகளுக்குச் சூட்டுதல் மற்றும் அஞ்சலி நிகழ்ச்சிகள் என்பன நடைபெற்றன.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஈழத் தமிழருக்கு ஆதரவாக மணிலாவில் கருத்தரங்கு

இலங்கைத் தமிழர் அனுபவிக்கும் மனித உரிமை மீறல்கள் பற்றிய கருத்தரங்கு ஒன்று பிலிப்பீன்ஸ் தலைநகர் மணிலாவில் கடந்த 17 ஆம் திகதி இடம் பெற்றது.

இலங்கையில் தமிழர் படும் இன்னல்கள் பற்றி இக்கருத்தரங்கில் விளக்கப்பட்டது.

சர்வதேச மனித உரிமை நிறுவனம், கத்தோலிக்க திருச்சபை ஆகியவற்றின் ஆதரவுடன் இக்கருத்தரங்கு நடத்தப்பட்டது. (ஓ-எ)

## ராணுவப் பயிற்சி பெற்ற பொலீஸார் வவுனியாவில்!

வவுனியா, நவ; 23

''பரா'' இராணுவப் பயிற்சி பெற்ற பொலீஸார் வவுனியாவில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இவர்கள் இராணுவத்தினருடன் இணைந்து பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

பரா இராணுவப் பயிற்சி பெற்ற பொலீஸார் மேலும் பலர் வவுனியாவுக்கு [illegible] சேர இருப்பதாகவும் தெரிய வருகிறது. (ஓ)

1990 - 91
கல்வியாண்டு
பல்கலைக்கழக
அனுமதி
வெட்டுப்புள்ளி
விவரம்
4 ஆம் பக்கத்தில்

## ஜீ. சி. ஈ. (சா/த) பரீட்சை வடபகுதியில் நடக்காது

கொழும்பு, நவ. 23

இந்த வருடத்திற்குரிய ஜீ. சி. ஈ. சாதாரண பரீட்சை அடுத்த மாதம் மூன்றாம் திகதி (டிசம்பர் 3) இலங்கையின் ஏழு மாகாணங்களிலும் நடைபெறும்; ஆனால் வடபகுதியில் அவ்வேளை நடக்காது.

வடக்கு-கிழக்கு மாகாணத்தின் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் டிசம்பரிலேயே பரீட்சையை

[4 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நத்தார், புதுவருட வாழ்த்துக்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். (வியாபாரிகளுக்கு விஷேட கழிவுண்டு) "மணிமேடை ஸ்ரோர்ஸ்" இல. 226A, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (14680)

### "இருள் இரவில் அல்ல"

மீரா வெளியீடு 'முடிவல்ல ஆரம்பம்' நாவலாசிரியர் சிதம்பரம் திருச்செந்திநாதன் எழுதியது (146 பக்கங்கள்) 45/- ரூபா புதிய அனுபவத்தினை தருகிறது. இந்நாவல் துர்க்கா ஸ்ரேசனேர்ஸ் சுன்னாகம், திருக்கணிதம் சாவகச்சேரி ஸ்ரீகாந், புத்தகசாலை நல்லூர். (14803)

### FUDO

Typewriters - தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும் - விற்கவும், சிறந்த முறையில் திருத்தவும் FUDO, 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம் இணை: பிரதான வீதி, மானிப்பாய். (C/5898)

### கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் பாடசாலை மாணவர்களிலிருந்து அரச கூட்டுத்தாபனங்களில் வேலை செய்வோர் வரையிலானவர்களுக்கு ஆரம்ப அறிவிலிருந்து ஆங்கிலம் தனிப்பட்ட முறையில் உங்கள் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும். விபரங்களுக்கு (நேரில் அல்லது கடித மூலம்) S. ஜெயராஜா, 204, மானிப்பாய் றோட், ஓட்டுமடம், யாழ்ப்பாணம். (14809)

## கிராமிய வங்கிக்கு அலையும் ஒய்வூதியர்கள்

கொடிகாமம், நவ. 23

கொடிகாமத்தில் உள்ள தென்மராட்சி கிழக்கு ப. நோ. கூ. சங்க கிராமிய வங்கிக்கு ஓய்வூதியர்கள் தினமும் அலைகிறார்கள்.

ஆகஸ்ட் மாத ஓய்வூதிய வவுச்சர்கள் கிடைத்து ஒரு மாதமாகியும் இதுவரை பணம் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-75)

## 8 ஆம் வருட நினைவஞ்சலி

### சூசைப்பிள்ளை சிமாம்பிள்ளை

பிறப்பு:- 06-06-1903
இறப்பு: 23-11-1982

எண்ண எண்ண எம் மிதயம்
எல்லாம் இனிக்கும் எம் ஐயா
நண்ணும் பிரிவின் எட்டாண்டில்
நாங்கள் நினைந்தே போற்றுகிறோம்.

உம் பிரிவால் வாடும்:
அன்பு மனைவி,
மக்கள், மருமக்கள்,
பேரப் பூட்டப் பிள்ளைகள்,
சகோதரர்.

5/3, அச்சுக்கூட வீதி.
யாழ்ப்பாணம். (14828)

# குவைத் - சவூதி மன்னர்களுடன் ஜோர்ஜ் புஷ் முக்கிய சந்திப்பு

ரியாத், நவ. 23

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் நேற்று சவூதி மன்னர் பஹ்தையும் குவைத் மன்னர் எமிரையும் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினார்.

குவைத்தில் இருந்து ஈராக் படைகளை வெளியேற்றும் முடிவில் அமெரிக்கா இன்னும் தீவிரமாக இருப்பதாக திரு. புஷ் பேச்சுக்களின் பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

சவூதி அரேபியாவில் ஈராக் எல்லை அருகே நிலைகொண்டுள்ள அமெரிக்கப் படையினரை திரு. புஷ் ஹெலிக்கொப்டரில் சென்று சந்தித்து உரையாடினார். (இ-எ)

## அமைச்சரவை மேலும் விஸ்தரிப்பு

புதுடில்லி, நவ. 23

அமைச்சரவையை மேலும் விரிவுபடுத்தப்போவதாக பிரதமர் சந்திரசேகர் தெரிவித்தார்.

மாலைதீவு புறப்படுவதற்கு முன்னர் புதுடில்லி விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் இத்தகவலை அவர் வெளியிட்டார்.

ஜனதா தள் சோஷலிஸ்ட் அரசுக்கு ஆதரவளிக்கும் சில கட்சிகளைச் சேர்ந்தவர்கள் அப்போது அமைச்சர்களாக நியமிக்கப்படுவர் என்றும் பிரதமர் சொன்னார்.

விமான நிலையத்தில் பிரதமரை இந்திரா காங்கிரஸ் தலைவர் ராஜீவ் காந்தி, துணைப்பிரதமர் தேவிலால் ஆகியோர் வழியனுப்பிவைத்தனர். (இ-எ)

## 60 பேரில் 30 பேர் மந்திரிகள்

பிரதமர் சந்திரசேகரின் விரிவுபடுத்தப்பட்ட மத்திய அமைச்சரவையில், புதிதாகச் சேர்க்கப்பட்ட 32 பேரில் 31பேரும் ஜனதாதள் சோஷலிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

டாக்டர் சுப்பிரமணிய சுவாமி மட்டுமே ஜனதா கட்சியைச் சேர்ந்தவர்,

ஜனதாதள் சோஷலிஸ்ட் கட்சியில் உள்ள சுமார் 60 எம். பிக்களில் 30க்கும் அதிகமானோர் அமைச்சர்களாகியிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## ஜேர்மனியரை ஈராக் விடுவிக்கும்

பக்தாத், நவ 23

பணயக்கைதிகளாக வைக்கப்பட்டுள்ள சகல ஜேர்மன் பிரசைகளையும் விடுவிக்கப் போவதாக ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசேன் அறிவித்திருக்கிறார்.

வளைகுடா நெருக்கடியில் ஜேர்மனி கடைப்பிடிக்கும் நிலைப்பாட்டை ஆராய்ந்த பின்னரே, ஜனாதிபதி ஹுசேன் இந்த முடிவை எடுத்திருக்கிறார். (இ-எ)

## உணவு முத்திரைப் பொருள் முல்லைத்தீவில் நிறுத்தம்

முல்லைத்தீவில் உணவு முத்திரைக்கான உணவுப் பொருட்கள் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளது.

அப்பகுதிக் கிளைகளில் 6 ஆம் புள்ளிக்கு உணவு முத்திரை வழங்கப்பட்டதை அடுத்து தொடர்ந்து வழங்க போதிய உணவுப் பொருள்கள் கையிருப்பில் இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-94)

## மாவீரரைக் கௌரவிப்பது ஒவ்வொருவரினதும் கடமை

### பல்கலை. வைபவத்தில் உரை

யாழ்ப்பாணம், நவ. 23

தமிழின விடிவுக்காக தமது உயிர்களை அர்ப்பணித்த மாவீரர்களை கௌரவிக்க வேண்டியது நம் ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

இதற்கு தமிழினத்துக்கென ஒரு நினைவு நாள் தேவை. இந்த நாளை மாவீரர் நாளாக ஒவ்வொரு வருடமும் கொண்டாடுவது மிகப் பொருத்தமானது.

நேற்று முன்தினம் புதன் கிழமை யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற மாவீரர் தின ஆரம்ப நிகழ்ச்சியில் உரையாற்றிய யாழ் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா இவ்வாறு கூறினார்.

தமிழீழ தேசியக்கொடியை ஏற்றிவைத்து உரையாற்றிய உபவேந்தர் அங்கு மேலும் கூறியதாவது:-

எமது தமிழினம் காலம் காலமாக பலகஷ்டங்களை சுமந்து வருகிறது.

இதிலிருந்து விடுதலை பெற எமது இளைஞர்கள் தமது உயிர்களைத் துச்சமாக மதித்துப் போராடி வருகிறார்கள்.

இதற்கு நாமும் எங்களால் இயன்ற பங்களிப்பை செலுத்த வேண்டியது தமிழர்களாகிய எங்களது கடமை ஆகும்.

எமது கஷ்டங்களில் இருந்து விடுபடும் நாள் வெகு தூரத்தில் இல்லை.

இந்த நாளில் நாம்கூட

[3 ஆம் பக்கம் பார்க்க]

## பார்வையாளர் நெருக்கடி பெருமளவில் குறைந்தது

யாழ்ப்பாணம், நவ. 23

யாழ். போதனாவைத்திய சாலையில் யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தினரின் தகவல் நிலையம்செயற்பட ஆரம்பித்ததை அடுத்து பார்வையாளரின் நெருக்கடி குறைந்துள்ளது.

பாஸ்மூலம் நோயாளரைப் பார்வையிடும் முறையினால் நோயாளர் பகுதியில்பார்வையாளர் நெருக்கடி அதிகமாக இருந்து வந்தது.

தற்போது நோயாளர்களைப் பார்வையிட வருவோரில் பலர் இத்தகவல் நிலைய மூலம் நோயாளரின் உடல் நிலையை அறிந்து விட்டு திரும்பிவிடுகின்றனர். [இ-15]

## மாலைதீவுக்கு சந்திரசேகருடன் சுக்லாவும்!

மாலே, நவ. 23

இந்திய வெளியுறவு அமைச்சர் வி. சி. சுக்லாவும் பிரதமர் சந்திரசேகருடன் மாலைதீவு தலைநகர் மாலே சென்றார்.

மாலைதீவு ஜனாதிபதி மமூன் அப்துல் கயூம் விமான நிலையம் சென்று பிரதமரை வரவேற்றார். (ஒ-எ)

## சனிக்கிரகத்தில் பெரும் புயல்!

சனிக் கிரகத்தில் பெரும் புயல் வீசுவதாக விஞ்ஞானிகள் அறிவித்திருக்கின்றனர்.

ஹபிள் தொலைநோக்கி அனுப்பிய படங்களில் இருந்து இது தெரிய வந்திருப்பதாக அவர்கள் கூறுகின்றனர்.

மணித்தியாலத்திற்கு ஆயிரம் மைல் வேகத்தில் புயல் வீசுகின்றதாம். சூரியமண்டலத்தில் உள்ள இரண்டாவது பெரிய கிரகம் சனி ஆகும். (ஒ-எ)

## 3 கட்சிகள் பகிஷ்கரித்தன

புதுடில்லி, நவ. 23

அமைச்சர்கள் பதவி ஏற்பு நிகழ்ச்சியைபாரதீய ஜனதா, மார்க்ஸீய கம்யூனிஸ்ட், இந்தியக் கம்யூனிஸ்ட் ஆகிய கட்சிகள் பகிஷ்கரித்தன.

## மாவீரர் நாள் பேச்சுப் போட்டி

★ பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டம் ★

இடம்:- கணேச வித்தியாசாலை — சித்தன்கேணி
காலம்:- 23-11-90 பி. ப. 2. 00 மணி
குறிப்பு;- தனியார் கல்விநிலைய இயக்குனர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் சகல மக்களையும் இவ் வைபவத்தில் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

**பண்டத்தரிப்பு கோட்டக் கல்வி அதிகாரி,**
**தனியார் கல்வி நிலைய ஒன்றியம்,**
**யாழ்ப்பாணம்.**

(14831)

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 07 - 05 - 1909
மறைவு: 04 - 12 - 1989

திதி. சஷ்டி: 23 - 11 - 1990

அமரர்

### சிவகுருநாதர் சிவசுப்பிரமணியம்

(சான்டோ மாஸ்டர்)
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்த அன்புத் தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

திருமறை

'கரும்பினும் இனியான் தன்னைக்
காய்கதிர்ச் சோதியானை
இருங்கடலமுதந்தன்னை பிறப்பொடு
பிறப்பிலானைப்
பெரும் பொருட் கிளவியானைப் பெருந்தவ
முனிவரேத்தும்
அரும் பொனை நினைந்த நெஞ்சமழகிதா
நினைந்தவாறே

சிவாயநம

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**மனைவி, மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

தலையாளி,
கொக்குவில். (14832)

## மரண அறிவித்தல்

### இ. அழகரத்தினம்

பயிரிக்கூடல், காரைநகரைச் சேர்ந்த இ. அழகரத்தினம் 21-11-90 அன்று காலமானார். அன்னார் தெய்வானையின் அன்புக் கணவரும், அருணநாதன் (சவூதி), சிவராசா (ஓமான்), சிவசோதி, காலம் சென்ற முருகதாஸ் இன் அன்புத் தகப்பனாரும், சிவராசா, ராஜேஸ்வரி, ராணியின் அன்பு மாமனாரும், ஆவார். அன்னாரது ஈமக்கிரியைகள் 21-11-90 அன்று காரைநகர் சாம்பலோடை மயானத்தில் இடம்பெற்றது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
அ. தெய்வானை,

பயிரிக்கூடல்,
காரைநகர். (14829)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### சோழியன் குடுமி

கடந்த மாதம் பாரிஸில் நடந்த இலங்கைக்கு உதவும் நாடுகள் குழுவின் கூட்டத்தில், இலங்கைக்கு நூறு கோடி அமெரிக்க டாலர்களை வழங்க இணக்கம் தெரிவிக்கப்பட்டது என்பது பழைய செய்தி. கேட்டதை விட 13 கோடி டாலர்கள் அப்போது அதிகமாகக் கொடுக்கப்பட்டன. அதற்கு மேலதிகமாகவும் இலங்கைக்கு மீண்டும் உதவி வழங்கத் தயாராக இருக்குமாறு உலக வங்கி சம்பந்தப்பட்ட நாடுகளைக் கேட்டிருப்பது புதிய செய்தி!

பெற்றோலியம் பொருட்களின் விலை உயர்ந்துள்ளதைக் காரணம் காட்டி இலங்கைக்கு மேலும் பிச்சை வாங்கிக் கொடுக்க உலக வங்கி விழுந்தடிக்கிறது! உலக வங்கிக்கு இலங்கை மீது இவ்வளவு அக்கறை எதற்கு? அது எப்படி வந்தது?

இலங்கையின் அரசுகள், குறிப்பாக ஐக்கிய தேசியக் கட்சி அரசு ஒவ்வொன்றும் உலக வங்கியின் கையாளாக, எடுபிடியாக "ஆமாம் சாமி"யாகவே இருந்து வருகின்றது. அவை எல்லாவற்றையும் விஞ்சும் விதத்தில் பிரேமதாசா அரசு உலக வங்கிக்கு அடிமைப்பட்டிருக்கிறது!

வறுமை ஒழிப்புத் திட்டம் (ஜனசக்தி) வீடமைப்புத் திட்டம் போன்றவற்றை மக்கள் சார்புத் திட்டங்களாக, சோசலிசத் திட்டங்களாகக் காட்டிக் கொண்டு, முதலாளித்துவ உலக வங்கியின் அடிமையாகவே அரசு செயற்படுகிறது. உலக வங்கி காலால் இடும் கட்டளைகளையும், நிபந்தனைகளையும், முகத்தில் ஒற்றி, சிரம் மேல் ஏந்திப் போற்றி ஏற்றுக்கொள்கிறது அரசு.

உலக வங்கி பெயருக்கு ஒரு சர்வதேச நிதி உதவி ஸ்தாபனம். ஆயினும் மற்றும் பல உலக ஸ்தாபனங்களைப் போலவே, அதுவும் அமெரிக்காவின் செல்வாக்கினால் மேலாதிக்கம் செய்யப்படுகிறது என்பது உலகறிந்த உண்மை. அமெரிக்காவைப் போல வலதுசாரிப் போக்குடைய அரசுகளுக்கு அதன் "நிதிக்கடாட்சம்" அதிகமாகக் கிடைக்கிறது.

உலக வங்கிக்கும் பிரேமதாசா அரசுக்கும் இடையில் உள்ள பிணைப்பு, இந்த நாட்டை முதலாளித்துவப் பாதைக்கு இழுத்துச் செல்கிறது என்பதனைச் சொல்லித் தெரிய வேண்டும் என்பதில்லை. இப்போதைய ஊளரித்த பொருளியல் திட்டங்கள் அதனைப் பட்டென எடுத்துக் காட்டுகின்றன.

இந்த நாடு முதலாளித்துவத் திசைக்குச் செலுத்தப்படுகிறது என்பதை மறைப்பதற்காகவே இனவாதம் தொடர்ந்து வளர்க்கப்படுகிறது. இப்போது தமிழருக்கு எதிராக நீண்ட யுத்தம் தொடுக்கப்பட்டிருப்பதும் அதற்காகவே.

நாட்டின் பொருளாதார வீழ்க்காட்டுக்கும், சீரழிவுக்கும் யுத்தத்தைக் காரணம் காட்டி, உலக வங்கியின் உதவியைத் தொடர்ந்து பெற்று, முதலாளித்துவத்துக்கு வீறு நடை போட அரசு முயல்கிறது. உலக வங்கி அதற்காகத்தான் இலங்கைக்கு நிதி உதவி கேட்டு வக்காலத்து வாங்குகிறது. சோழியன் குடுமி சும்மாவா ஆடும்?

# குடாநாட்டின் பல பகுதிகளிலும்
# சீ-பிளேனிலிருந்து பரவலாக வேட்டு

யாழ்ப்பாணம், நவ. 23

நேற்று முன்தினம் இரவு முதல் நேற்று அதிகாலை வரை குடாநாட்டின் பல பகுதிகளிலும் சீ-பிளேன் இடைவெளிவிட்டுவிட்டு தாக்குதல் நடத்தியது.

முதலில் இரவு 7.00 மணியளவில் வந்த சீ-பிளேன் நல்லூர், திருநெல்வேலி, கொக்குவில், கோண்டாவில் உள்ளிட்ட பகுதிகளில் தாளப் பறந்து நோட்டமிட்டது.

இதனை நோக்கி புலிகள் தாக்குதல் மேற்கொண்டனர். சீ-பிளேன் வேட்டுக்களைத் தீர்த்துவிட்டு ஓடி மறைந்தது.

மீண்டும் இரவு 10 மணியளவில் வந்த சீ-பிளேன் அரியாலை, கோண்டாவில் பகுதிகளில் வேட்டுக்களைத் தீர்த்தது.

இதைத் தொடர்ந்து நேற்றுக்காலை 5.30 மணியளவில் மீண்டும் வந்த சீ-பிளேன் பல பகுதிகளையும் சுற்றி நோட்டமிட்டவாறு கொக்குவில், கோண்டாவில் பகுதிகளில் பரவலாக வேட்டுக்களைத் தீர்த்தது.

சீ-பிளேனை நோக்கி புலிகள் பல இடங்களில் தாக்குதல் நடத்தினர். (இ-6)

## கிராமசேவை அலுவலர் தொழிற் சங்கம்

யாழ். மாவட்டத்தில் கிராமசேவை அலுவலர்களாக பதவி மாற்றம் செய்யப்பட்டவர்களுக்கென தனியான தொழிற்சங்கம் ஒன்று அமைக்கப்பட இருக்கிறது.

தொழிற்சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் நாளை மறுதினம் (ஞாயிறு) காலை 10 மணிக்கு நல்லூர் சாதனா பாடசாலையில் நடைபெற இருக்கிறது.

விசேடசேவை அலுவலர்கள் பயிர்ச் செய்கை உத்தியோகத்தர்கள், விவசாய விரிவாக்க உத்தியோகத்தர்கள் ஆகியோர் கிராம சேவை அலுவலர்களாக பதவி மாற்றம் செய்யப்பட்டிருந்தனர் என்பது தெரிந்ததே. (ஒ-3)

## இனப்பிரச்சினை பற்றி ஆராய முஸ்லிம்கள் மாநாடு

கொழும்பு, நவ 23

இனப்பிரச்சினை தொடர்பாக முஸ்லிம்களின் நிலைப்பாட்டைத் திரட்டுமுகமாக முக்கிய மாநாடு ஒன்றை சபாநாயகர் அல்ஹாஜ் எம். எச். முஹம்மது கூட்டுகிறார்.

எதிர்வரும் 25 ஆம் திகதி காலை பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இம் மாநாடு நடைபெறும். (எ)

## சேர். பொன் இராமநாதன் குருபூசை

இராமநாதன் கல்லூரி ஸ்தாபகர் சேர். பொன்னம்பலம் இராமநாதன் குரு பூசை இன்று வெள்ளிக்கிழமை நடைபெறும்.

வழமைபோல் கல்லூரியின் இராமநாதர் ஆலயத்தில் அபிஷேகமும் விசேஷ பூசையும் நடைபெற உள்ளன. (இ)

## சந்திகளில் புலிகளின் அறிவித்தல் பலகை

யாழ்ப்பாணம், நவ. 23

மாவீரர் வாரத்தை ஒட்டி குடாநாடு முழுவதும் உள்ள முக்கிய சந்திகளில் விடுதலைப் புலிகளின் அறிவித்தல் பலகைகள் தொங்க விடப்பட்டுள்ளன.

இந்த வெண்ணிற பலகைகளில் மாவீரர் தினத்தை முன்னிட்டு விடுதலைப்புலிகளால் வெளியிடப்பட்ட பிரசுரங்கள் ஒட்டப்பட்டுள்ளன.

அதேசமயம் மாவீரர் வாரத்தை முன்னிட்டு பல பொது நிறுவனங்களும் பிரசுரங்களை வெளியிட்டுள்ளன. (இ - 6)

## டிச. 3 முதல் உணவு முத்திரை பெறுமதி அதிகரிக்கப்படும்

உணவு முத்திரையின் பெறுமதி டிசம்பர் 3 ஆம் திகதி முதல் அதிகரிக்கப்படும்.

உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் வீரசிங்கா மல்லிமாராச்சி கடந்த புதன் நாடாளுமன்றத்தில் இத்தகவலை வெளியிட்டார்.

வரவு-செலவுத்திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகையில் அமைச்சர் மேலும் சொன்னதாவது;

ஜனசக்தித் திட்டத்தின் இரண்டாம் கட்டம், எதிர்வரும் டிசம்பர் 3 ஆம் திகதி முதல் 30 உதவி அரச அதிபர் பிரிவுகளில் அமுல் நடத்தப்படவிருக்கின்றது.

அந்தத் திகதியில் இருந்து உணவு முத்திரையின் பெறுமதியும் அதிகரிக்கப்படும்.

அடுத்த பொதுத் தேர்தலுக்கு முன்னர் ஜனசக்தித் திட்டம் முழுமையாக அமுல் நடத்தப்பட்டு விடும்.

இப்படி அமைச்சர் மல்லிமராச்சி சொன்னார். (இ - எ)

# பகவான் சத்யசாயி பாபா விரும்பும் அத்வைத தத்துவம்

இன்று 23 ஆம் திகதி சத்யசாயி சேவா உலக நிறுவனம், பகவான் சத்யசாயி பாபாவின் 65 ஆவது பிறந்த தின விழாவை உலகம் முழுவதும் கொண்டாடுகிறது.

மனிதன் முதலில், தான் இழந்த மனிதத்துவத்தை அடையவேண்டும். அதன் பின்னர் தெய்வத்துவத்தை அடையவேண்டும். விலங்குகள் போன்று உண்ணல், உறங்கல், மைதுனம் என்பனவற்றோடு மனிதன் தனது அருமையான பிறவியை வீணடிக்கின்றான்.

எத்தனையோ பிறவிகளில் செய்த நல்வினைப் பயனாக இந்த மனிதப்பிறவியை எடுத்த மனிதன், தனது பிறப்புரிமையான தெய்வத்துவத்தை அடைய முயலாது விலங்கு மட்டத்திலே இருந்து விடப் பார்க்கிறான் என்பதே சத்யசாயியின் கவலையாகும்.

"சொத்துவழி வந்த முத்துப்பதித்த பொற்பாத்திரத்திலே தனது நாளாந்த உணவை சமைத்தவன்போல, நீ உனது உடம்பை வீண்பிரயோசனம் செய்கிறாய்" என்று சத்யசாயி வருத்தத்தோடு தெரிவிக்கிறார்.

சத்யம் என்பது உண்மை, நேர்மை என்பனவற்றைக் குறிக்கும். தர்மம் என்பது அந்த சத்திய அடிப்படையிலான நல்ல சிந்தனை, சொல், செயல் என்பனவற்றைக் குறிக்கும். சாந்தி என்பது சத்திய தர்மத்தை ஒருவன் கடைப்பிடிப்பதால் ஏற்படும் நிலையான மனச்சந்தோஷத்தைக் குறிக்கும். பிரேமை என்பது சத்யம், தர்மம், சாந்தி ஆகியவற்றின் பயனாகிய (பிறர்மேல்) அன்பு பாராட்டுதலைக் குறிக்கும். அஹிம்சை என்பது அன்பு காரணமாக, உயிர்களுக்கு துன்பம் செய்யாமையைக் குறிக்கும்.

மேற்படி ஐந்து மேம்பாட்டுக் குணங்களும் சைவர, அடிப்படை தத்துவமாகிய அத்வைதத்தை எல்லோரும் விளங்கிக் கொள்ளவேண்டும். அதாவது, கடவுள் ஒருவர், அவர் பிரிக்கப்பட முடியாதவர்; அதாவது பிரிவின்றிய அகண்டவஸ்துவே கடவுள்; கடவுளையே, ஆத்மன் என்று உபநிடதங்கள் அழைக்கின்றன. நமது ஊனுடம்பு, மனவுடம்பு ஆகிய இரண்டுக்கும் உள்ளே இருப்பது ஆத்மன்; ஒரே ஆத்மனே எல்லோரது உடல்களுக்குள்ளேயும் இருக்கின்றான்.

மனவுடம்பு, ஊனுடம்பு எல்லாம் சடம். இந்தச்சடம் [illegible] யாகவோ இருக்கிறது. சடமே மாயை, சைதன்யமே பிரமம். சடமே சக்தி, சைதன்யமே சிவம். நாம் ஒவ்வொருவரும் சிவசக்தி வடிவினர். அதே போன்று இந்த பிரபஞ்சமும் சிவசக்தி வடிவினது. சிவம் அடையப்படும்போது சக்தி விலகிவிடுகிறது.

நாம் சக்தியில் (மாயை) சிக்கியிருக்கும்போது எமக்கு சிவமும் தெரிவதில்லை. இது தான் கயிறு பாம்பாகத் —தெரிதல் என்னும் உதாரணத்தால் விளக்கப்படுத்தப்படும் அத்வைத தத்துவம்.

சத்யசாயி பாபா இந்தத் தத்துவத்தினை எல்லோரும் புரிந்து கொள்ளவேண்டும் என்றே விரும்புகிறார். ஆதலால் அவருடைய 65 ஆவது பிறந்த தினமாகிய இன்று நாம் இது பற்றிச் சிந்திப்போமாக.

பஜனை, கீர்த்தனை, செபம், தியானம் மற்றும் அதி முக்கியமான சேவை போன்ற காரியங்களைச் செய்வதற்கு நமது உடல்களைப் பயன்படுத்தி, மனிதப்பிறவியின் அரிய நன்மையை போற்றிக் கொள்வோமாக!

- சு சிவதாஸ்

(பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபாவின் 65 ஆவது ஜெயந்தி விழா இன்றாகும். அதனை யொட்டி இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது) ★

## இரத்த பேதி நோய்

கொழும்பு, நவ. 23

கண்டி மாவட்டத்தில் இரத்தோட்ட பகுதியில் இரத்த பேதி நோய் காரணமாக 12 பேர் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக பத்துக்கு அதிகமான ஹோட்டல்களை மூடிவிடும்படி சுகாதார அதிகாரிகள் உத்தரவிட்டனர். (உ)

## படகு ஏற்றி வந்த வான் மீது சூடு

படகு ஒன்றை ஏற்றிவந்த வான் மீது ஹெலியிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது.

இச்சம்பவம் கிளாலியில் இடம்பெற்றது. (இ-117)

## இளைஞர் விடுவிப்பு

கடந்த மாதம் 30 ஆம் திகதி கடலில் வைத்துக் கைதான இளைஞர் ஒருவரை ஸ்ரீலங்கா கடற்படையினர் விடுவித்தனர்.

யாழ். டேவிட் வீதியைச் சேர்ந்த ஞானசேகரன் பேதுருப்பிள்ளை என்பவரே அந்த இளைஞர் ஆவார்.

குடாக் கடலில் கடற்தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்களிடம் பிரஸ்தாப இளைஞர் கடற்படையினரால் ஒப்படைக்கப்பட்டதாகவும்—

மீனவர்கள் அந்த இளைஞரை புலிகளிடம் ஒப்படைத்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-51)

## பயிற்சி வகுப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தில் இயங்கிவரும் சிற்றூர் இணக்க மன்ற, மேன்முறையீட்டு இணக்க மன்ற உறுப்பினர்களுக்கு பயிற்சி வகுப்புகள் நடைபெறவுள்ளன. (இ-113)

## பதவி விலகல் கடிதங்கள்

யாழ்ப்பாணம். கிளிநொச்சி மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களில் கடமையாற்றிய சில ஊழியர்களுக்கு பதவி விலகல் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன என்று தெரிகிறது.

வேலைக்கு சமூகம் அளிக்காததே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-117)

## நோயாளிகள் சிரமம்

மினிபஸ்சேவை முத்திரைச் சந்தியுடன் நிறுத்தப்படுவதால் யாழ். பெரியாஸ்பத்திரிக்குச் செல்லும் நோயாளர்கள், பொதுமக்கள் பலசிரமங்களை அனுபவிக்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. [இ - 11]

## மாவீரரைக்...

[2ஆம் பக்கத் தொடர்ச்சி]

மாவீரர்களாக மரணித்துவிடினும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஆனால் ஒன்று மட்டும் உறுதி. எமது இனத்தின் விடிவை நாம் விரைவில் சந்திப்போம்.

இதற்கு மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து பங்களிக்கவேண்டும்.

இப்படி அவர் கூறினார்:

விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் வீ. கே. கணேசலிங்கம் தமதுரையில் மாவீரர்களின் பெற்றோர்களும் கௌரவிக்கப்பட வேண்டியவர்களே.

இதன் மூலம் மேலும் பல வீரப் பெற்றோர்களை உருவாக்க முடியும் என்றார்.

இறுதியாக பல்கலைக்கழக மாணவன் சத்தியநாதன் உரையாற்றினார். [இ-6]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1990-91 கல்வியாண்டு பல்கலைக்கழக அனுமதி; தமிழ் மாவட்டங்களில் வெட்டுப்புள்ளி விவரம்

கொழும்பு, நவ. 23

1989 ஆகஸ்ட் ஜீ. சி. ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களை பல்கலைக்கழகங்களில் 1990-91ஆம் கல்வியாண்டுக்கு அனுமதிப்பதற்கான வெட்டுப்புள்ளி (Cut-out Marks) விவரங்கள் கிடைத்திருக்கின்றன.

அதன்படி யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய ஐந்து மாவட்டங்களுக்கும் உரிய வெட்டுப்புள்ளி பற்றிய அட்டவணை வருமாறு:-

| மாவட்டம் | மருத்துவம் | பல் வைத்தியம் | மிருக வைத்தியம் | விவசாயம் | உயிரியல் விஞ்ஞானம் | பொறியியல் I | பொறியியல் II | பௌதீக விஞ்ஞானம் | முகாமைத்துவம் | வர்த்தகம் | கலையியல் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 288 | 284 | 280 | 268 | 257 | 282 | 274 | 232 | 277 | 263 | 248 |
| கிளிநொச்சி | 246 | 241 | 227 | 222 | 194 | 262 | 257 | 211 | 264 | 261 | 234 |
| வவுனியா | 238 | 234 | 232 | 229 | 214 | 250 | 238 | 181 | 276 | 257 | 236 |
| மன்னார் | 225 | 222 | 219 | 209 | 196 | 215 | 208 | 184 | 276 | 254 | 242 |
| முல்லைத்தீவு | 214 | 211 | 204 | 192 | 182 | 213 | 212 | 180 | 271 | 250 | 236 |

யாழ்: பல்கலைக் கழகத்தில்

## புலிகள் போராட்ட வரலாறு: புகைப்படக் கண்காட்சி

யாழ்ப்பாணம், நவ. 23

மாவீரர் வாரத்தை ஒட்டி யாழ். பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகத்தினரால், ஏற்பாடு செய்யப்பட்ட ''விடுதலைப் புலிகளின் போராட்ட வரலாறு'' என்ற புகைப்படக் கண்காட்சி செல்வநாயகம் மண்டபத்தில் நேற்றுக்காலை ஆரம்பமானது.

கண்காட்சியை விடுதலைப் புலிகளின் கலை, கலாசாரப் பிரிவுப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை திறந்து வைத்தார்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிச் செயலாளர் நாயகம் திரு. யோகரத்தினம் யோகி, யாழ். மாவட்ட அரசியற் பொறுப்பாளர் திரு. ராஜன் ஆகியோரும் இதில் கலந்து கொண்டனர்.

தமிழ்ப் பிரதேசத்தில் இப்படியொரு புகைப்படக் கண்காட்சி முதன் முதலாக நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

வல்வைப் படுகொலைகள், குமுதினிப்படகு படுகொலை, யாழ். மருத்துவமனை சேதம், மலையகத் தமிழர்களின் சோக வரலாறு, அமைதிப் படையின் வெறியாட்டங்கள் என்பவற்றைச் சித்திரிக்கும் புகைப்படங்கள் அங்கு வைக்கப்பட்டிருந்தன.

கண்காட்சி எதிர்வரும் 27 ஆம் திகதி வரை தினமும் காலை 9 மணி முதல் பிற்பகல் 5 மணிவரை பல்கலைக்கழக செல்வநாயக மண்டபத்தில் நடைபெறும். (ஒ-6)

## சாவகச்சேரியில்

யாழ். மாவட்டக் கூட்டுறவாளர் நடத்தி வரும் தமிழீழ மாவீரர் நாள் நிகழ்ச்சித் தொடரில், தென்மராட்சிக் கோட்டத்துக்கான நிகழ்ச்சிகள் இன்று மாலை 6 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெற இருக்கின்றன. (ஒ-3)


## மரண அறிவித்தல்

திருமதி
ஐயம்பிள்ளை அன்னபூரணிப்பிள்ளை

புங்குடுதீவு 5 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், யாழ். இந்துக் கல்லூரி ஒழுங்கை 58 ஆம் இலக்கத்தில் வசித்தவருமாகிய காலஞ்சென்ற ஐயம்பிள்ளை அவர்களின் மனைவி அன்னபூரணிப்பிள்ளை அவர்கள் காலமானார். இவர் காலஞ்சென்ற திருமதி நாகநாதன் நாகம்மா, சிவசுப்பிரமணியம் [இளைப்பாறிய ஆசிரியர்], திருமதி சிவஞானம் சிந்தாமணி, காலஞ்சென்ற இராசேந்திரம், காலஞ்சென்ற தம்பாபிள்ளை, காலஞ்சென்ற வைத்திலிங்கம், சாந்தலிங்கம் [சுவிஸ்], குமரையா, குணமாலை, பூபாலசிங்கம் [பாலவிநாயகர் றேடர்ஸ் பங்காளர்கள், கிளிநொச்சி], சிவராசா [கனடா] ஆகியோரின் அருமைத் தாயாரும், காலஞ்சென்ற நாகநாதன், மகேஸ்வரி, சிவஞானம், அங்கையற்கண்ணி, பரமேஸ்வரி, அன்னலட்சுமி, விஜயலட்சுமி [சுவிஸ்], நாகம்மா, ரதிதேவி, அன்னலட்சுமி [நிலா], புஷ்பராணி [கனடா] ஆகியோரின் அன்பு மாமியும், கார்த்திகேசு [சிவகுரு] வின் அன்புச் சகோதரியும், திருமதி நல்லதங்கம், இரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 23-11-90 இன்று பகல் 12 மணியளவில் கோம்பயன்மணல் மயானத்தில் நடைபெறும், இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

க. கார்த்திகேசு [சிவகுரு]
[சகோதரன்]

58, இந்துக்கல்லூரி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

[14662]


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/2இலுள்ள அச்சகத்தில் 23 - 11 - 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## இன்று சாயி ஜயந்தி தினம்

யாழ்ப்பாணம், நவ. 23

பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் 65 ஆவது ஜயந்தி தினம் இன்றாகும்.

இதனை ஒட்டி யாழ். குடாநாட்டிலுள்ள சாயி சேவா சமித்திகள் அனைத்திலும் ஜயந்தி தினம் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. (ஒ-6)

## நவக்கிரியில் வெடிக்காத ஷெல்கள்!

யாழ்ப்பாணம், நவ. 23

புத்தூர், நவக்கிரிப் பகுதி வாழைத் தோட்டங்களில் வெடிக்காத மூன்று ஷெல்கள் நேற்று கண்டெடுக்கப்பட்டன.

நேற்று முன்தினம் (புதன்) பலாலி முகாமில் இருந்து இப்பகுதியை நோக்கி அடுத்தடுத்து பல ஷெல்கள் ஏவப்பட்டன.

இதனால் ஒருவர் பலியானார். மற்றும் பலர் காயமடைந்தனர் என்பது தெரிந்ததே. (ஒ-15)

### பதவி விலகு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

இரண்டு வேட்பாளர்கள் தாங்கள் நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்துள்ளனர்.

ஒருவர் வெளியுறவு அமைச்சர் டக்ளஸ் ஹேர்ட்.

மற்றவர், நிதி அமைச்சர் ஜோன் மேஜர்.

முதல் கட்ட வாக்கெடுப்பில் 152 வாக்குகள் பெற்ற திரு. மைக்கல் ஹெஸல்டைனும் இரண்டாம் கட்டத் தேர்தலில் போட்டியிடுகின்றார்.

கடந்த 11 வருடங்களாக பிரிட்டிஷ் பிரதமராகவிருக்கும் திருமதி தாட்சர், 1975 ஆம் ஆண்டு முதல் கன்சர்வேட்டிவ் கட்சியின் தலைவராக இருந்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-எ)


பெற்றோமாக்ஸ்

பாவிக்கக்கூடிய சிறந்த நிலையிலோ அல்லது புதிதாகவோ பெற்றோமாக்ஸ், ஹரிக்கேன் விளக்கு [லாந்தர்] விற்பனைக்குவைத்திருப்போர் உடனடியாக தொடர்பு கொள்ளவும்.

உதயன்,
நாவலர் வீதி,


### பாதுகாப்பு..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நேரம் தடைப்பட்டது.

இந்தத் தாக்குதல் தொடர்பாக செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவால் கொழும்பு தலைமையகத்துக்கு உடனடியாக அறிவிக்கப்பட்டதாகத் தெரிய வருகிறது.

கடந்த 19 ஆம் திகதி காலையும் துறைமுகப் பகுதியில் பொம்மர் குண்டு வீச்சு இடம் பெற்றது குறிப்பிடத்தக்கது. (ஒ-5-6)

### வவுனியா...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

டுள்ளது.

வவுனியா மாவட்டத்தில் ஊரடங்குச் சட்டம் அமுலில் இல்லாவிட்டாலும் பொது மக்கள் வீடுகளிலேயே தங்கியிருக்கவேண்டும் என்றும்-

பொது இடங்களில் கூடுவதைத் தவிர்க்க வேண்டும் என்றும்-

அந்தப் பிரசுரத்தின் மூலம் பணிக்கப்பட்டிருக்கிறது.

இந்தத் துண்டுப் பிரசுரங்கள் வவுனியா நகருக்கு வெளியே உள்ள பகுதிகளிலும் ஹெலி மூலம் வீசப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3-5)

### ஜீ. சி. ஈ. .

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

நடத்துவது குறித்து இப்போது தீவிரமாக ஆராயப்பட்டுவருவதாகவும், இன்னும் தீர்க்கமான முடிவில்லை என்றும் பரீட்சைத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஆனால், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் இப்போது ஜீ. சி. ஈ. சாதாரணப் பரீட்சை நடத்தப்படமாட்டாது என்றும், நிலைமை வழமைக்குத் திரும்பிய பின்னர் விசேட பரீட்சை நடத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (அ-3)

### சீ - பிளேன்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தாகக் கூறப்பட்டது.

இதேவேளை—

வடமராட்சியின் அனேக பகுதிகளிலும் குடாநாட்டின் பல பகுதிகளிலும் நேற்று முழுநாளும் சீ-பிளேன் வீட்டு, வீட்டு தாக்குதல்களை நடத்தியதாக எமது செய்தியாளர்கள் அறிவிக்கின்றனர்.

குடாக்கடல் பகுதியிலும் சீ-பிளேன் தாக்குதல்களை மேற்கொண்டதாக கடற்றொழிலாளர்கள் தெரிவித்தனர். (ஒ-117-15-51)

ஈழ தமிழர் பிரச்சினை:

## சந்திரசேகரிடம் மகஜர்

புதுடில்லி, நவ. 23

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணுமுகமாக சில யோசனைகள் அடங்கிய மகஜர் ஒன்றை பிரதமர் சந்திரசேகரிடம் இந்திரா காங்கிரஸ் எம். பி. திரு. இரா. அன்பரசு நேரில் கையளித்தார். (ஒ-எ)

## வீர மரணம்

நேற்று முன்தினம் இடம் பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியான ஞானம் (கண்டி) வீரமரணமடைந்தார்.

இதேவேளை-

கடந்த 17 ஆம் திகதி ஆனையிறவில் இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் படுகாயமடைந்த அறிஞன் (இராஜேஸ்வரன் ஜெயராஜ்) என்ற போராளியும் நேற்று முன்தினம் வீரமரணமடைந்தார். (உ)

## உடுப்பிட்டியில் மூதாட்டி பலி

நேற்று முன்தினம் காலை 6 மணி முதல் 7 மணி வரை வல்வெட்டித்துறை கடற் பகுதியில் தரித்து நின்ற பீரங்கிப் படகுகளில் இருந்து கரையோரப் பகுதிகளை நோக்கி பீரங்கி மற்றும் ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இந்தத் தாக்குதலில் சிக்கி உடுப்பிட்டியில் 78 வயது மூதாட்டி ஒருவர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

## வல்வையில் பொம்மர் தாக்கு

யாழ்ப்பாணம், நவ. 23

நேற்று முன்தினம் [புதன்] நண்பகல் வல்வெட்டித்துறைப் பகுதியிலும் பொம்மர் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தியது. [ஓ]

### நேற்றும் ஹெலி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வர்கள் என்று பலரும் காயமடைந்தனர்.

ஹெலித் தாக்குதலில் பெருமளவு வீடுகள், கடைகளின் கூரைகள், ஜன்னல் கண்ணாடிகள் போன்றவை சேதமுற்றன.

பல இடங்களிலும் காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருப்போர் விவரம் வருமாறு:-

செல்வராசா சசிகுமாரன் [12 வயது] புத்தூர், வேலுப்பிள்ளை சரவணப்பிரபாலன் [25 வயது] கல்வியங்காடு, சுப்பிரமணியம் இராமநாதன் [66 வயது] நல்லூர், சே. செல்லத்துரை [55வயது] யாழ்ப்பாணம், மத்தியாஸ் தேவநாயகம் [18 வயது] பாஷையூர், நாகம்மா [50 வயது] பருத்தித்துறை.

வேறு ஆஸ்பத்திரிகளிலும் பலர் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை-

கல்வியங்காட்டுப் பகுதியில் ''எல்வ்'' வாகனம் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது. [ஓ-15-5-6-72]

### ஹெலி வேட்டு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

முக்கிய இடங்களில் அலங்காரப் பந்தல்கள் அமைக்கப்பட்டு அவற்றில் மாவீரர்களின் உருவப்படங்கள் வைக்கப்பட்டு, மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

நேற்று முழுவதும் குடாநாட்டின் பல பகுதிகளிலும் ஹெலிகள் பரவலான தாக்குதல்களை மேற்கொண்டபோதிலும் மாவீரர்தின வைபவங்கள் எவ்வித இடையூறுகளும் இன்றி சிறப்பாக நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. [உ-6]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org